அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 257, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

257—

வீட்டுமனைப் பட்டா

***2598—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, மாம்பாக்கம் கிராமம், மாம்பாக்கம் சத்திரம் சர்வே எண் 5/3-ல் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

திருத்தணி தொகுதி, மாம்பாக்கம் கிராமம், மாம்பாக்கம் சத்திரம் சர்வே எண் 5/3-ல் வசிப்பவர்களுக்கு அவர்களுடைய நிலமானது இலுப்பை தோப்பு புறம்போக்கு என்ற வகைப்பாட்டினைச் சார்ந்தது என்பதால், தற்போது வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற திருத்தணி தொகுதியில் அடங்கி இருக்கின்ற மாம்பாக்கம் சத்திரம் என்கிற கிராமத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக கிராம நத்தமாக வகைப்பாட்டினை மாற்றி வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றேன். மேலும், தமிழகத்தின் தன்னிகரில்லா தலைவராக,*

2018 ஜூலை 3]

மறைந்த பின்னாலும், மறக்க முடியாத மாதர்குல மாணிக்கமாக ஏழைகளின் இதயத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் அறிக்கையில் வீடற்றவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு தொடர்ந்து வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலக்கை நிர்ணயம் செய்து வீட்டுமனைப் பட்டாக்களையும் வழங்கினார்கள். அதேபோன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் சென்ற ஆண்டு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்கள். இந்த ஆண்டு வீடற்ற 3 இலட்சம் பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்ற இலக்கை நிர்ணயித்திருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்பேரில் திருத்தணி நகரத்தில் நத்தம் செட்டில்மென்ட் பணி நடைபெற்று வருகிறது. அந்தப் பணி நடைபெறுகிறபோது, 25 ஆண்டுகள், 40 ஆண்டுகளுக்கு மேலாக அங்கே வாழ்கிற ஏழை எளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வருகிறது. 25 ஆண்டுகளுக்கு மேல் 10 ஆயிரம் குடும்பங்கள் ஆட்சேபணையற்ற புறம்போக்குகளில் வீடுகள் கட்டிக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு நத்தம் settlement செய்யப்படும்போதே பட்டா வழங்கினால் அரசுக்கு நிதித் சுமை ஏதும் ஏற்படப் போவது இல்லை. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு திருத்தணி நகராட்சிப் பகுதியில் ஆட்சேபணையற்ற பகுதியில் வீடு கட்டிக்கொண்டு இருப்பவர்களுக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டா வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நிலத்தின் வகைப்பாட்டினை மாற்றி வழங்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்துள்ளார்கள். அரசு நிலத்திலே உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்குகிற அரசாணை தற்போது நடைமுறையிலே இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க,

மீண்டும் அந்த அரசாணையை வெளியிடுவதற்கான ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஆகவே, நிலங்களை வரன்முறைப்படுத்தி பட்டா கொடுக்கக்கூடிய அந்த அரசாணையை வெளியிட்டதற்குப் பின்பு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது திருத்தணி நகராட்சியில் நத்தம் settlement *பணி நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அனைத்தும் வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையிலே கொடுத்த வாக்குறுதியைச் சுட்டிக்காட்டினார்கள். அந்த வகையில், தமிழகம் முழுவதும் 20 இலட்சம் பட்டாக்கள் கொடுக்கப்பட்டாலும், திருவள்ளூர் மாவட்டத்தில் ஏறத்தாழ 90,213 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்கிற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் செய்தும், ஆட்சேபணையற்ற புறம்போக்குகளில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கவும், பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. பல இடங்களில் இவை வருவாய்ப் பதிவேடுகளில் ஏற்றப்படாமல் விடுபட்டுள்ளன. என்னுடைய தொகுதியிலேகூட, திருத்தணி மற்றும் பள்ளிப்பட்டு வட்டங்களில், இதுபோன்ற நிலைமை உள்ளது. எனவே, வழங்கப்பட்ட பட்டாக்களின் விவரங்களை வருவாய்ப் பதிவேடுகளில் ஏற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2018 ஜூலை 3]

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வழங்கப்பட்ட பட்டாக்களுடைய கணக்கு வருவாய்த் துறையின் ஆவணங்களில் ஏற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். துறையின் கணினிமயமாக்கும் பணிகளோடு சேர்த்து அந்தப் பணிகளும் தற்போது மிக விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் புன்னக்காயல் என்ற மீனவர் கிராமம் உள்ளது. அந்த புன்னக்காயல் கிராமம், சர்வே எண் 73, கிராமக் கணக்குகளின்படி ஒதுக்கப்பட்ட காடுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. பரப்பளவு குறிப்பிடப்படாமல் சர்வே செய்யப்படாத நிலமாக உள்ளது. இப்புல எண்ணில், 30 ஆண்டுகளுக்கு மேலாக சுமார் 597 குடும்பத்தினர் வீடு கட்டி குடியிருந்து வருகின்றார்கள். அதில் அறுபது வீடு காலனி, நூறு வீடு காலனி, இருதயபுரம், பவுலா நகர், மறக்குடி தெரு ஆகிய தெருக்கள் உள்ளன. மேற்படி புலத்தில் வீடு கட்டி குடியிருந்து வரும் அந்த மக்கள் ரேஷன் அட்டை வைத்திருக்கிறார்கள்; மின்சார இணைப்பும் பெற்றிருக்கிறார்கள். 1984 ஆம் ஆண்டு* UDR *பணியைச் செய்கின்றபோது, அந்தப் பகுதி* forest *பகுதியிலும் வகைப்படுத்தப்படவில்லை. அந்த இடம் குறிப்பிடப்படாத இடமாக, ஒதுக்கப்படாத இடமாக வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கு குடியிருக்கின்ற ஏறத்தாழ 1,000 பேருக்கு பட்டா கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த மீனவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், அந்த நிலத்தினை நத்தம் நிலமாக மாற்றி பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுமக்கள் குடியிருக்கிற அந்தப் பகுதியிலே உள்ள அந்த நிலத்தின் வகைப்பாடு, வருவாய்த் துறை ஆவணங்களில் குறிப்பிடப்படாமல் இருக்கிறது; ஆகவே, அந்த நிலத்தை நத்தம் நிலமாக வகைப்பாடு மாற்றம் செய்து அந்தப் பகுதி மக்களுக்கு பட்டா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். வருவாய்த் துறை, நிலை ஆணை எண் 21-ன் கீழேயுள்ள வரையறைக்குள் வருமேயானால், அதனைக் கொடுக்கலாம்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல, அந்த நிலத்தின் வகைப்பாட்டினை ஆய்வு செய்வதற்கும் மாவட்ட நிருவாகத்திற்கு உடனடியாக அறிவுரைகள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

258—

தொழிற்பேட்டை

***1184—திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரத்தில் SIDCO தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.